# தி.மு.க. கொள்கை - குறிக்கோளும் சட்டதிட்டங்களும்!

திராவிடர்களின் விடிவெள்ளியாக, வாராது வந்த மாமணி யாய் திகழ்ந்த

"நீதிக்கட்சியின்சட்டதிட்டங்கள்" நடைமுறைக்கு பொருந்தி வராததால் தான் அக்கட்சி ஒரு தேக்க நிலையை அடைய நேரிட்டது என்று சொல்லப்படுவது உண்டு. அந்த காலக்கட்டத்தில் நீதி கட்சிக்கு தோள் கொடுத்து காப்பாற்றிய கடமையும், பொறுப்பும் தந்தை பெரியார் அவர்களைச்சாரும். அந்த நீதிக்கட்சியின் நீட்சிதான் சுயமாரியாதை உணர்வு கொண்ட திராவிடர் கழகமாக 1944-ல் உருப்பெற்றது. அதன் வழி திராவிடத்தின் "திசை காட்டியாகவும் கலங்கரை விளக்கமாகவும்" திகழும் திராவிட முன்னேற்றக் கழகம் 1949-ல் உதயமானது.

"திராவிடர்களின்-தமிழர்களின்" உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும், நீதிக்கட்சியின் சமூக நீதியை, சுயமரியாதை இயக்கத்தின் தன்மான உணர்வை. தந்தை பெரியாரின் சமூக மாற்றத்திற்கான உயரிய சித்தாந்தத்தை அரசியல் ரீதியாக சாதித்துக் காட்டவும், பேரறிஞர் அண்ணா அவர்களால் ஒரு ஜனநாயக இயக்கமாக நிறுவப்பட்டது தான், "திராவிட முன்னேற்றக்கழகமாகும்".

-தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும், நீதிக்கட்சியின் சமூக நீதியை சுயமரியாதை இயக்கத்தின் தன்மான உணர்வை தந்தை பெரியார் அவர்களின் சமூக மாற்றத்திற்கான உயரிய சித்தாந்தத்தை அரசியல் ரீதியாக சாதித்துக் காட்ட பேரறிஞர் அண்ணா அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு ஜனநாயக இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகமாகும். ஒரு நாட்டை வழிநடத்தத் தேவை அரசியல் அமைப்புச்சட்டம் ஆகும்.

அரசியல் நாட்டின் சட்டம் என்பது, ஒரு அரசாங்கத்தின் அதிகாரங்கள் என்ன? அந்த அரசாங்கத்தின் பொறுப்புகள் என்ன? மக்களுடைய உரிமைகள் என்னென்ன? மக்களுடைய கடமைகள் என்னென்ன? என்பதைத் தெளிவாக விளக்கும் ஒரு மூலபத்திரம் ஆகும்.

ஒரு நாட்டிற்கு எப்படி ஒரு அரசியல் சட்டம் CONSTITUTION தேவையோ, அதே போல கட்சிக்கும் சட்டத்திட்டங்கள்-PARTY CONSTITUTION மிகவும் அவசியமாகும்.

பல அரசியல் கட்சிகளின் வரலாற்றில் கட்சிக்கான சட்டத்திட்டங்கள் சரிவர செயல்படுத்த இயலாத தன்மையில் இருப்பதால் தான் நிலைத்திருக்க முடியாமல் போனது என்பது, கடந்த கால நிகழ்கால வரலாறு ஆகும்.

கட்சி சட்டதிட்டங்களில் இடம்பெறும் தவிர்க்க முடியாத ஒரு சொல் அந்தந்த கட்சி அமைப்பினர் அனைவரும் ஒன்று கூடி முடிவெடுத்தல் என்பதாகும்.

**கழகத்தின் சட்டத்திட்டங்கள் வடிவம் பெற்ற வரலாறு**

திராவிட முன்னேற்றக்கழகம் தொடங்கிய போது அதை வழிநடத்த கட்சி சட்டத்திட்டம் தேவை என்பதை பேரறிஞர் அண்ணா அவர்கள் உணர்ந்து உலகின் பல்வேறு நாடுகளில் இயங்கி வந்த கட்சி அமைப்புகளின், வரலாற்றையும், அக்கட்சிகளை இயக்கும் அந்தந்த கட்சிகளின் சட்டத்திட்டங்களையும் பலவாறு நன்கு ஆராய்ந்து பொதுவுடைமைக் கட்சி வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் "கட்சி கட்ட" தேவையான சட்டத்திட்ட விதிகளை உருவாக்க **சட்டத்திட்ட அமைப்புகுழுவை** முதன் முதலில் உருவாக்கி அதன் மூலம் கழகத்தின் உச்சஅமைப்பான பொதுக்குழுவின் ஒப்புதலைப்பெற்று நடைமுறைப்படுத்தினார்கள்.

**கழகத்தின் "கொள்கை - குறிக்கோள்- கோட்பாடு"**

குறிக்கோள் பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கடைபிடித்து வந்த குறிக்கோளுக்கு ஏற்ப தமிழகம் ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய மொழி வழி மாநிலங்களிலும் இந்திய அரசுரிமை, ஒருமைத்தன்மை, அரசியல் அமைப்புச்சட்டம் ஆகியவற்றிற்கு உட்பட்டு நெருங்கிய திராவிட கலாச்சார கூட்டுறவு நிலவ பாடுபடுவது. அரசியல் அமைப்புச்சட்டத்தில் முழு நம்பிக்கையும், பற்றுறுதியும் கொண்டு சமதர்மம், சமயச்சார்பின்மை, ஜனநாயகம் ஆகிய லட்சியங்களில் முழு ஈடுபாடும் பற்றும் கொண்டு இந்திய நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை கட்டிக்காப்பது என்பது திராவிட முன்னேற்றக்கழகத்தின் **குறிக்கோள்** ஆகும்.

**கோட்பாடு** பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவுறுத்தி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போற்றிப் பாதுகாத்து பின்பற்றிய கொள்கைகளான கடமை- கண்ணியம்-கட்டுப்பாடு அடிப்படையில், அரசியலில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும், பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப் பணியாற்றிடவும், பொருளாதாரத் துறையில் வறுமையை வென்று, சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெற வழிவகை கண்டிடவும்., பிறமொழி ஆதிக்கத்திற்கு இடங்கொடாமல், அந்தந்த மாநில மொழிகளை வளர்த்திடவும், அவற்றிற்கான உரிய இடத்தை பெற்றுத்தரவும் ஒன்றிய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, மாநிலங்களில் சுயாட்சியும்-ஒன்றியத்தில் கூட்டாட்சியும் (AUTONOMY FOR STATES & FEDERATION AT CENTRE) உருவாக்கிடவும் தொண்டாற்றுவது என்பது கோட்பாடு ஆகும்.

கழகத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப தேவைப்படும் திருத்தம் சட்டத்திட்ட திருத்தங்களின் மூலம் தான் பெறப்படுகிறது.

திராவிட இயக்கத்தில் வேர்நிலை தொடர்பு கொண்ட கட்சி தி.மு.க வலிமையான முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட கட்சி தி.மு.க கொள்கையில் வைரம் பாய்ந்த இயக்கம் தி.மு.க. அரசியல் முதிர்ச்சியோடு தீவிர அரசியல் கட்சியாக -SERIOUS POLITICAL PARTY ஆக செயல்படும் கட்சி தி.மு.க. கழக சட்டத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள எந்தபிரிவும்-உட்பிரிவும் செயலிழக்காமல் (Defunct) இயங்கும் இயக்கம் தி.மு.க DMK is the only party with its Moorings in the DRIVIDIAN MOVMENT. (திராவிட இயக்கத்தின் கொள்கையில் கட்டுண்டு இயங்கும் ஒரே இயக்கம் தி.மு.க.)

கடல்கடந்து வாழும் ஒட்டுமொத்தத் தமிழ் இனத்தின் தார்மீக ஆதரவு பெற்ற ஒரே நம்பிக்கை நட்சத்திரம் தி.மு.க.

பட்டொளி வீசி பறந்திடும் கழகத்தின் இருவண்ணக்கொடியின் நோக்கம்

| | |
|---|---|
| BLACK | SYMBOLIZE THE SUBJUGATION OF THE DRAVIDIAN PEOPLES. |
| கருப்பு | திராவிடர்களின் அரசியல், கல்வி, பொருளாதார, சமுதாய வாழ்வில் உள்ள இருண்ட நிலையை உணர்த்தி நிற்கும் அறிகுறியாகும். |
| RED | SYMBOLIZE THE HOPE OF THE OPPRESSED AND TO EXPAND TO FILL THE DARKNESS UNTILL THE FLAG IS RED |
| சிவப்பு | "அந்த இருண்ட நிலையை படிப்படியாக போக்கி ஒளிநிலையை உண்டாக்க வேண்டும் என்பதைக் காட்டும் நம்பிக்கையின் அறிகுறியாகும். (பெரியவர் T.M பார்த்தசாரதி எழுதிய தி.மு.க வரலாறு (பக்கம்-94) |

இதைத் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் "காலப்போக்கியல் இயக்கத்தின் கொடியில் கருப்பு வண்ணத்தை விட சிவப்பு வண்ணம் அதிகரிக்கும் காலம் வரும் என்று நம்பிக்கை தெரிவித்தார்கள்.

**கட்சியில் உறுப்பினராதல்**

கட்சியின் கொள்கை கோட்பாடுகளுக்கு உட்பட்டு சேர்பவர்களுக்கு உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கும் நடைமுறை கொண்டு வந்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். தொடக்கத்தில் கையால் எழுதி பூர்த்தி செய்து பொதுச் செயலாளர் கையொப்பமிட்ட உறுப்பினர் உரிமைச்சீட்டு வழங்கப்பட்டது, இன்றைக்கும் ஒரு சில கழகத்தின் மூத்த முன்னோடிகள் நினைவு கூர்வது, "என்னிடம் இத்தனை உறுப்பினர் அட்டை உள்ளது. அதில் பொதுச் செயலாளர் பேரறிஞர் அண்ணா கையொப்பமிட்டுள்ளார் பொதுச் செயலாளர் நாவலர் கையொப்பமிட்டுள்ளார் என்றுதங்களின் மூதாதையர் சொத்தின் மூலப் பத்திரத்தை காட்டி பெருமைப்படுவது போன்று மகிழ்ந்து கூறுவதை இன்றும் காணலாம்.

அழுத்தமான -நம்பிக்கையுடன் கட்சியைப் பின்பற்றும் உறுப்பினர்களை- HARDCORE PARTY MEMBERS+66 கொண்டகட்சி. இவர்கள் visible members கண்ணுக்கு தெரிந்த உறுப்பினர் - INVISIBLE MEMBERS கண்ணுக்கு தெரியாத தார்மீக உறுப்பினர்கள் DMK HAS A STRONG TRADITIONAL VOTE BANK, DMK HAS STRONG TRADITIONAL SUPPORT BASE என்ற மக்களின் நிரந்தரமான ஆதரவை பெற்றுத் திகழும் இயக்கம் தி.மு.க. எனவே தான் 'ஆழமாக வேரூன்றி பலமான கட்டமைப்புடன் இயங்கும் அரசியல் கட்சி" "DEEP ROOTED AND WELL OREGANISED POLITICAL PARTY" என்று பெருமையுடன் குறிப்பிடப்படுகிறது.

தொடக்கக்காலத்தில் ஒரு கிளை அமைய தேவைப்படும் 25 உறுப்பினர்களை ஒரே ஊரில் சேர்க்க முடியாமல் அடுத்தடுத்த ஊர்களில் ஒவ்வொருவராக சேர்த்து கிளைக்கழகம் அமைக்கப்பட்ட வரலாறு கழகத்தின் தொடக்கக்கால வரலாறு ஆகும்.

ஒரு காலக்கட்டத்திற்கு பிறகு கழகத்தின் வளர்ச்சி அசுரவேகத்தில் வளரும் வேகத்தை பெற்றது. ஊர் கிளை தொடங்கி தலைமைக்கழக அமைப்புத் தேர்தல் வரை ஜனநாயக ரீதியில் நிர்வாகிகளை தேர்ந்தெடுக்கும் அமைப்பாக உருவெடுத்தது.

1974-ஆம் ஆண்டு வரை வட்டக்கழகம் என்றிருந்த அமைப்புஒன்றியக்கழகங்கள் என்ற நிலைக்கு விரிவடைந்தது. ஒன்றிய / நகர / பேரூர் / பகுதிக்கழக அமைப்புகள் மூலம் மாவட்டக்கழக நிர்வாகிகள் தேர்வு முடிந்து, பொதுக்குழு உறுப்பினர்கள் பங்குபெறும் பொதுக்குழுவில் தான், கழகத்தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகிய பொறுப்புகளுக்கான தலைமைக்கழக தேர்தல் நடைபெறும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் மாநில சுயாட்சி முழக்கம், நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்களின் ஐம்பெரும் முழக்கங்கள் இவற்றோடு கழகத்தின் சட்டத்திட்டங்கள் வடிவம் கொண்ட வரலாறு தொடங்குகிறது. கழகம் தொடங்கிய போது நிறுவப்பட்டது **சட்ட திட்ட உருவாக்கக்குழு** ஆகும்.

அதன் பிறகு கழகம் பெற்றுள்ள வளர்ச்சிக்கு ஏற்பவும், கழகத்தை வழிநடத்திச் செல்வதில் ஏற்பட்டுள்ள அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டும், கழக அமைப்புகளின் நிர்வாக நடைமுறைகள் மேலும், செம்மையாக அமைய திருத்தங்கள் தேவைப்படும். அவ்வப்போது அமைவது தான் கழகத்தின் **சட்டத் திட்ட - திருத்தக்குழு** ஆகும்.

கட்சியின் வளர்ச்சிக்கு ஏற்ப தேவைப்படும் திருத்தங்கள் சட்டத்திட்ட திருத்தங்களின் மூலம் தான் பெறப்படுகிறது.

1993-ஆம் ஆண்டு வாக்கில் கொடி, சின்னம் குறித்த வழக்கில் கழகத்தின் சார்பில் வாதிட்டு வென்ற உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் கபில்சிபல் அவர்கள் வியந்து சொன்னதாக அண்ணன் முரசொலிமாறன் அவர்கள் அன்றைய பொதுக்குழுவில் சொன்னது, "தி.மு.கவையும் அதன் இரு வண்ணக்கொடியையும், உதயசூரியன் சின்னத்தையும் காப்பாற்றிக் கொடுக்க எனக்கு(கபில்சிபலுக்கு)கைகொடுத்து உதவியது"கழகத்தின் திட்டத்திட்டங்களும்- "கலைஞரின் வியூகமும் வியூகமும் தான்" என்று பெருமிதத்துடன்" கூறினார் என்பதாகும்.

அப்படிப்பட்ட சட்டத் திட்டத்தின் வலிமை தான் கழகத்தை ஆற்றல் மிக்க இயக்கமாக இன்றளவும் கட்டிக்காத்து வருகிறது.

**சோம்நாத் சாட்டர்ஜியும்-கட்சிக் கட்டுப்பாடும்**

நாடாளுமன்ற மக்களவையின் தலைவராக இருந்தவர் மேற்கு வங்கத்தைச் சார்ந்த மார்க்சிய பொதுடமைவாதி. சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள் ஆவார்கள்.பலஆண்டுகாலம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து பழுத்த அனுபவம் பெற்றவர். ஒன்றிய அரசுக்கு எதிராக மக்களவையில் வாக்களிக்க, மக்களவைத்தலைவராக இருந்த சோம்நாத் சாட்டர்ஜி அவர்களுக்கு அவரது C.P.M. கட்சி "கட்சிக்கட்டளை கொறடா- (WHIP)" பிறப்பித்தது. சபாநாயகர் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவர் என்ற நிலையை சோம்நாத் சாட்டர்ஜி எடுத்தார். அப்போது கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். இது குறித்து C.P.M கட்சி சொன்னது " சோம்நாத் சாட்டர்ஜி நாட்டின் சட்டத்தை மதித்து நடந்திருக்கலாம். ஆனால் எங்களது கட்சியின் சட்டம் அதைவிட மேலானது" என்பதாகும்.

அந்த நிகழ்வு குறித்து சோம்நாத் சாட்டர்ஜி "என் வாழ்வின் மிகக் கடுமையான தருணம் இது" என தனக்குத்தானே நொந்து விமர்சித்துக் கொண்டது ஒரு கட்சியின் சட்ட திட்டத்தின் மகிமையை உணர்த்துவதாகும்.

**FLAT ORGANISATION**

ஒரே தலைமையின்கீழ் பலநிலைகளில் பதவிகள் இருந்தாலும் அத்தனையும் ஒரே மட்டத்தில் என்ற நிலையில், ஜனநாயகத்திற்கு உகந்ததாக செயல்படாத கட்சிகள் FLAT ORGANISATION -தரை மட்டத்தில் உள்ள கட்சிகள் என்று தான் பார்க்கப்படுகின்றன.

சில கட்சிகளுக்கு அதன் சட்டத்திட்டங்களே அதனைத்திருப்பித் தாக்கும் BOOMERANG ஆக அமைந்துவிடுகிறது.

எடுத்துக்காட்டாக ஒரு கட்சியின் பொதுச்செயலாளரை, லட்சக்கணக்கில்? கோடிக்கணக்கில்? உள்ளதாக சொல்லப்படும் அடிப்படை உறுப்பினர் அனைவரும் ஒரே இடத்தில் ஒன்று கூடி தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற நடைமுறை சாத்தியமில்லாத கட்சி சட்டத்தால் அந்த அரசியல் கட்சி திணறுவதையும், தேர்தல் ஆணையம் முன்பும், நீதிமன்றத்திலும் விழிபிதுங்கி நிற்கும் **திரிசங்கு** நிலையையும், காணமுடிகிறது, சில கட்சிகள் "கொள்கைக்கும் அரசியல் நிலைப்பாட்டிற்கும் இடையில் சிக்கித் தவிக்கும் நிலையில்" -CAUGHT BETWEEN IDEOLOGIES AND POLITICS. உள்ளதால், அரசியலில் தடுமாறும் நிலை முடியாத சூழல் கொண்ட கட்சி.

**கழகமும் ஜனநாயகமும்**

1956 திருச்சி மாநாட்டில் பொதுச் செயலாளராக தேர்வு பெற்றிருந்த நாவலர் அவர்களை விளித்து வாழ்த்தும் போது பேரறிஞர் அண்ணா அவர்கள் "தம்பி வா! -தலைமை ஏற்க வா! உன் ஆணைக்கு கட்டுப்பட்டு நடக்கிறோம்- வா! என்று கழகத்தின் கட்டுப்பாட்டை உணர்த்தி உரையாற்றிய வரலாறு கழகத்தின் வரலாறு ஆகும்.

1967-இல் கழகம் மாபெரும் வெற்றி. பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்திற்குத் தேர்தெடுக்கப் பெற்றிருந்தாலும், அண்ணா அவர்கள் தான் தமிழகத்தின் முதல்வர் என்று ஏகோபித்த முடிவிருந்தாலும் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி தேர்ந்தெடுக்கப்படாத நிலையில், CHIEF MINISTER DESIGNATE என்று ஆகாத நிலையில் பத்திரிக்கை நிருபர்கள் கூட்டத்தில் பங்கேற்று "கழக ஆட்சியில் இன்னென்ன திட்டங்களை நிறைவேற்றுவோம்" என்று விளக்கி சொல்லிக் கொண்டிருந்த போது ஒரு பத்திரிக்கையாளர் அண்ணா அவர்களை சாமர்த்தியமாக மடக்குவதாக எண்ணி ஒரு கேள்வி கேட்டார்.

இதையெல்லாம் எந்த CAPACITY-இல் நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்ட கேள்விக்கு "நான் தான் முதலமைச்சராக வரப்போகிறேன் என்று ஜனநாயக நடைமுறைக்கு விரோதமாக அண்ணா அவர்கள் பதிலளிப்பார்கள் என்று எதிர்பார்த்த நேரத்தில் "அறிஞர் அண்ணா அவர்கள் "நான் இதையெல்லாம் தி.மு.கவின் பொதுச்செயலாளர் என்ற பொறுப்பின் தகுதி அடிப்படையில் தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன் - TAM SPEAKING TO YOU IN THE CAPACITY OF THE GENERAL SECRETARY OF THE DMK" என்று தனக்கே உரிய ஆங்கிலத்தில் பதில் அளித்து, கழகத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தினார்கள்.

**தலைவர் பொறுப்பு:-** 50 ஆண்டுகாலம் கழகத்தின் தலைவராக வீற்றிருந்த பெருமை நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்களையும், கழகத்தின் இன்றைய தலைவராக வீற்றிருக்கும் பெருமை மாண்புமிகு தலைவர் தளபதி அவர்களையும் சாரும்.

**பொதுச்செயலாளர் பொறுப்பு:-** கட்சியின் நிறுவனர் பேரறிஞர் அண்ணா அவர்களும், டாக்டர் நாவலர் அவர்களும், இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களும், வகித்த பொறுப்பை இன்றைய தினம் மதிப்பிற்குரிய அண்ணன் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் வகிக்கிறார்கள்.

**குத்தாலம் பி. கல்யாணம்**
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்



**பொருளாளர் பொறுப்பு:-** நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்கள், இனமானப் பேராசிரியர் அவர்கள், சாதிக்பாட்சா அவர்கள், அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் போற்றுதலுக்குரிய கழகத்தலைவர் நம் தளபதி ஆகியோருக்குப் பிறகு தற்போது அண்ணன் T.R. பாலு அவர்கள் வகிக்கும் பொறுப்பு.

தலைமையின் பணிச்சுமையை பகிர்ந்து கொள்ளும் பொறுப்பிற்கு வருபவர்கள் பின்பற்றும் சிறந்த முன் உதாரணத்தை (PRECEDENT) உருவாக்கி வைத்துள்ள இயக்கம் தி.மு.க இதைத்தான் HINDU ஆங்கில நாளிதழ் மேற்கண்ட பொறுப்புகள் குறித்தும் பொறுப்புக்கு வருகிறவர்கள் குறித்தும் குறிப்பிடுகிற போது,

| | |
|---|---|
| GENERAL SECRETARY | 2nd MOST INFLUENTIAL POST IN THE PARTY என்றும் |
| | 2nd MOST POWERFUL POSITION IN THE PARTY என்றும் |
| TREASURER | THE 3rd IN PARTY HIERARCHY என்றும் |

கழகத் தலைவர் பொறுப்பு உள்ளிட்ட மூன்றும் -PARTY KEY POST ஆகும். என்றும், மூன்று பொறுப்புகளையும் ALL ARE THE "NATURAL CHOICE PREFERRED CHOICE" என்றும் அழகாக குறிப்பிட்டு இதுதான் தி.மு.க.வின் புகழத்தக்க அம்சமாகும் - THE CREDIT OF THE DMK என்றும் வர்ணித்துள்ளது.

**பாரம்பரிய மரபு போற்றும் தி.மு.க**

மாறுதல் ஒன்றே மாறாதது என்பது இயற்கையின் நடைமுறை என்றிருந்தாலும் மாறுதலுக்கு உட்படாத ஒன்று மரபு ஆகும்.

சட்டங்கள் மாறுதலுக்கு உட்பட்டவை - LAWS ARE CHANGE ABLE

வழக்கங்களும், மரபுகளும் மாறுதலுக்கு உட்படாதவை - CUSTOMS AND CONVENTIONS ARE UNCHANGEABLE.

சட்டம் இயங்கும் தன்மையானது - LAW IS DYNAMIC.

வழக்கம் நிலையானது - CUSTOMIS STATIC.

**கழக பாரம்பரியம்**

திராவிட எனும் சொல்லை அநேக கட்சிகள் பயன்படுத்தினாலும், திராவிட லட்சியத்தை அழுத்தமாக இதயத்தில் ஏந்தி வைத்திருக்கும் கட்சி தி.மு.க. தான் THOUGH MANY PARTIES USE DRAVIDA IN THEIR NAME, ONLY DMK FOLLOWS THE DAVIDAIAN IDEOLOGY TO THE CORE. மரபு வழி பாரம்பரியம் உள்ள கட்சி: உறுதி மிக்க அமைப்புகள் உள்ள கட்சி கொள்கை, கோட்பாடு, குறிக்கோள், நோக்கம், லட்சியம், ஆகியவை உள்ள கட்சி ஆகும். அவற்றை இதுவரை சாதனைகளின் வழி தொடர்ந்து நிறைவேற்றியுள்ள கட்சி, தமிழ் பண்பாடு, கலாச்சாரம் மற்றும் அரசியல் உரிமைகளுக்காகப் போராடிய கட்சி, தடை சட்டங்களை கடந்த கட்சி, மிரட்டலுக்குப் பயந்து பெயரைத் திருத்தம் செய்யாத கட்சி, நெருக்கடிநிலை காலத்தை சந்தித்த கட்சி, நீண்ட காலத்தொடர், போராட்டங்களை நடத்தி அதன் மூலம் தண்டனை பெற்று சிறை நிரப்பிய கட்சி, இதுவரை சுமார் 1000 பேருக்கு மேலாக தம் இன்னுயிரை இயக்கத்திற்காக, அளித்த தொண்டர்களின் கட்சி, அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டு தலைவர் கலைஞர் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டு கழகத்தலைவர் தளபதி அவர்களால் வழி நடத்தப்படும் கட்சி. திராவிட இயக்கத்தில் தொடர்பு கொண்ட கட்சி திராவிட இயக்கத்தின் அரசியல் வெளிச்சம் தி.மு.க கொள்கையில் வைரம் பாய்ந்த தி.மு.க அரசியல் முதிர்ச்சியோடு தீவிர அரசியல் கட்சியாக SERIOUS POLITICAL PARTY ஆக திரைகடல் ஓடியும் திரவியம் தேட, கடல் கடந்து சென்று வாழும் ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் தார்மீக ஆதரவு பெற்ற ஒரே நம்பிக்கை நட்சத்திரம் தி.மு.க. சரியான கொள்கை மட்டும் போதாது, கொள்கையை வென்றெடுக்க ஸ்தாபன உத்திரவாதம் வேண்டும் என்ற மாமேதை லெனின் வரிகளுக்கு ஏற்ப திராவிட இயக்க கொள்கைகளை நிறைவேற்றும் அமைப்பான இயங்கி வரும் இயக்கம் தி.மு.க திராவிட இயக்கத்தின் இன்றைய நிலைத்த அரசியல் அடையாளம் தி.மு.க. உட்கட்சி ஜனநாயகத்திற்கும் INNER PARTY DEMOCRACY& இடமளித்து உட்கட்சி தேர்தலை தொடர்ந்து முறையாக நடத்தி வரும் இயக்கம் தி.மு.க. இதைத் தான் கழகத்தின் பொதுச்செயலாளராக வீற்றிருந்த "இனமானப் பேரராசிரியர் அவர்கள் "கழகத்தின் வேரிலேயே ஜனநாயக நீர் தான் பாய்ச்சப்படுகிறது" என்று அருமையாக வர்ணித்தார்கள்.

அனைத்து சமுதாயத்திற்கும் கட்சி பொறுப்புகளில் உரிய பிரதிநித்துவம் அளிக்கும் கட்சி அனைவரையும் உள்ளடக்கிய ஜனநாயகத்தை INCLUSIVE DEMOCRACY-ஐ பின்பற்றும் இயக்கம்.

அனைத்து சமுதாயத்தினரிடமும் "நட்பு, நல்லுணர்வுடன் (BON HOMIE)-A FEELING OF FRIENDLINES ஆக அணுகும் இயக்கம். MAJORITY SHOULD BE RESPECTED., MINORITY SHOULD BE PROTECTED- பெரும்பான்மை சமூதாயத்திற்கான உரிய மரியாதையை அளித்து, சிறுபான்மை சமூதாயத்திற்கு பாதுகாவலனாக திகழும் இயக்கம். எனவே தான் தி.மு.க. அனைத்து சமுதாயங்களையும் உள்ளடக்கிய ஒரு கூட்டு அமைப்பாக -DMK IS A FEDERATION OF ALL COMMUNITIES ஆகத் திகழ்கிறது. இதைத் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் தம்பி! தி.மு. கழகம் ஒரு சாதாரண இயக்கம் அல்ல. ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்தின் உரிமையை வென்றெடுக்கப் புறப்பட்ட இயக்கம் என்றார். அழுத்தமான நம்பிக்கையுடன் கொள்கையைப் பின் பற்றும் கட்சி, உறுப்பினர்களை HARD CORE PARTY MEMBERS 606 கொண்டது. DMK HAS A STRONG TRADITIONAL VOTE BANK. DMK HAS A STRONG TRADITIONAL SUPPORT BASE என்ற நிலையில் மக்களின் நிரந்தரமான ஆதரவைப் பெற்றுத் திகழும் இயக்கம். எனவே தான் தி.மு.க "பலமான கட்டமைப்புகளுடன் ஆழமாக வேரூன்றிய அரசியல் கட்சி-DEEP ROOTED-WELL ORGANIZED POLITICAL PARTY என்று குறிப்பிடப்படுகிறது. உயரிய லட்சியங்களை மையமாக கொண்டு சுழலும் இயக்கம். சித்தாந்த தெளிவு கொண்ட இயக்கம்.

**கழகத்தின் இதயம் பொதுக்குழு**

கழகத்தின் உச்ச அமைப்பு பொதுக்குழு ஆகும். கட்சியின் அனைத்து நிலைகளிலிருந்து பிரதிநிதிகள் இடம் பெறும் அமைப்பு பொதுக்குழு உட்கட்சி ஜனநாயகத்தின் உச்சபட்ச அமைப்பு பொதுக்குழு ஆகும். கட்சியின் கொள்கை கோட்பாடு அரசியல் நிலையை தீர்மானித்திடும் பொதுக்குழு. கட்சிக்குள் சுய விமர்சனத்திற்கு வாய்ப்பளித்து அதனை உள்வாங்கி எதிரிகளின் விமர்சனத்தை சாதுர்யமாக தாக்குப் பிடிக்கும் கட்சி.

ஆலோசனையோடு கூடிய விமர்சனம் தான் வரவேற்கதக்கது -CRITICISAM IS NOT WELCOME, IF IT IS ACCOMPANIED BY ADVISE-என்பதற்கு ஏற்ப கட்சியின் அக்கரையோடு கூடிய விமர்சனத்தை "தனித்தும்-இணைந்தும், முரண்பட்டும்"எழும் அனைத்து நோக்கங்களும், கருத்துக்களும், எண்ணங்களும் (Views and opinion) விவாதித்து பொதுக்குழுவின் ஒருமித்த முடிவை எய்தி அதன்பின்பு செயலாக்கத்திற்கு நகரும் மாபெரும் ஜனநாயக அமைப்பு தி.மு.க. பொதுக்குழு உரிமை: திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, குறிக்கோள்

விளக்கங்களையும், சட்டதிட்ட விதிகளையும், இயற்றவும், திருத்தவும், நீக்கவும், பொதுக்குழுவே உரிமைப்படைத்தாகும்.

கொள்கை -குறிக்கோள் விளக்கங்களையும், சட்டத்திட்ட விதிகளை இயற்றவும், திருத்தவும், பொதுக்குழுவே உரிமை படைத்ததாகும். கழகத்தின் முழுஅதிகாரம் கொண்ட அமைப்பு பொதுக்குழு ஆகும்.

| | |
|---|---|
| கழகத்தின் | Highest Policy making body- கொள்கை வகுக்கும் உயர் அமைப்பு<br>Highest decision making body-உரிய முடிவுகள் எடுக்கும் உயர் அமைப்பு<br>The Apex decision making body- உரிய முடிவுகள் எடுக்கும் உச்ச அமைப்பு பொதுக்குழு ஆகும். |

இதைத்தான் நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் முரசொலி கடிதத்தில்-"இயக்கத்தின் நலன், வளர்ச்சி இவற்றை மட்டுமே இலக்காகக் கொண்டு திறந்த மனதுடன் கலந்தாலோசிக்கக் கூடுவது தான் தான் கழக பொதுக்குழு" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

உட்கட்சி ஜனநாயகம் INNER PARTY DEMOCRCY (மிளிரும் இயக்கம் தி.மு.க என்பதை இனமானப் பேராசிரியர் அவர்கள் தி.மு.கவின் வேரிலேயே ஜனநாயகன் நீர்தான் பாய்ச்சப்படுகிறது என்று வர்ணித்துள்ளார்.

**தலைமைக் கழகத் தேர்தல்**

தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகிய பொறுப்புகளுக்கு முறையாக வேட்புமனு தலைமைக்கழகத்தில் அளித்து பொதுக்குழுவிற்கு வரும் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரும் பொதுக்குழு உறுப்பினர்களில் ஒரு உறுப்பினராக மேடைக்கு கீழே அமர்ந்தும், கட்சியின் மூத்த முன்னோடி ஒருவர் தலைமைக் கழக்கதின் தேர்தல் ஆணையராக மேடையில் அமர்த்தப்பட்டு, அவர் கழகத் தலைவர் பொறுப்பிற்கும், பொதுச்செயலாளர் பொறுப்பிற்கும்,பொருளாளர் பொறுப்பிற்கும் இன்னென்னாரை தவிரவேறு யாரும் விண்ணப்பம் கொடுக்காததால் கழகத்தின் தலைவர் பொறுப்பிற்கும் பொதுச்செயலாளர் பொறுப்பிற்கும், பொருளாளர் பொறுப்பிற்கும் இன்னென்னார் ஒருமனதாக தேர்வு பெறுகிறார்கள் என ஆணையர் அறிவித்த பிறகு தான் கழகத் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகியோர் மேடைக்கு சென்று அமரும் உன்னதமான ஜனநாயக மரபை பின்பற்றும் ஜனநாயக இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

**"வரலாற்றை தெரிந்து கொள்ளாத ஒரு சமூகம் வரலாறு படைக்க முடியாது" என்பார்கள்.**

**"நேற்றைய வரலாற்றை அறிய**
**இன்றைய வரலாற்றை உணர்ந்து வாழ,**
**நாளைய வரலாற்றை உருவாக்க உதவும் வரலாறு**
**திராவிட இயக்க வரலாறு" -தி.மு.க வரலாறு ஆகும்.**

அப்படிப்பட்ட DRAVIDIAN PHILOSOPHY BASED PARTY திராவிட கொள்கையின் அடிப்படை சார்ந்த கட்சி, DRAVIDIAN MAJOR - திராவிடத்தின் உயர்நிலை அரசியல் கட்சி என பெயர் பெற்ற பேரறிஞர் அண்ணா உருவாக்கிய கட்சியை, DRAVIDIAN PATRIACH எனும் **எம்குலத் தலைவர்** நம் நெஞ்சம் நிறைந்த **கலைஞர்** அவர்களின் அடிசுவற்றில் எந்தவிதமான அரசியல் நிலைப்பாட்டிலும் "சூழலோடு பொருந்தியவை மட்டுமே வாழும்"- SURVIVAL OF THE FITTST என்ற நிலைப்பாட்டில் அழுத்தமாக நிற்கும் இயக்கம் தி.மு.க. அத்தகைய கழகத்தையும், அதன் வழி திராவிட மாடல் ஆட்சியையும் பார்போற்றும் வண்ணம் செவ்வனே நடத்தி வரும் கழகத்தலைவர் திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு தளபதி அவர்களின் நல்லாட்சி தொடர,

"ஒவ்வொரு வீரனும் தன் கடமையை செய்ய வேண்டும் என்று இங்கிலாந்து எதிர்பார்க்கிறது"-"ENGLAND EXPECTS THAT EVERY MAN WILL DO HIS DUTY" என்ற லார்டு நெல்சனின் வரிகளை ஒத்த செய்தியை நமக்கு சொல்ல இருக்கிற நம் ஒப்பற்ற கழகத்தலைவர் தலைமையில் "கூடுவோம் பொதுக்குழுவில்! வியூகம் வகுப்போம் ! செயலாக்குவோம்! வெற்றி பெறுவோம்!